**தேசிய இளைஞர் படையணியின் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய இளைஞர் படையணியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய இளைஞர் படையணியின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்த பட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் , 2022 திசெம்பர் 31 இல் முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்டும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா 333 மில்லியன் ஆன 05 பொருட்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இசைக்கருவிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, 2022 ஆண்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்ட சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் ஆண்டில ஏனைய பொருட்களை மறுமதிப்பீடு செய்து, கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ற திகதியிலிருந்து தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் படையணியால் வாஙகப்பட்டிருந்த நடைமுறையல்லாச் சொத்துக்கள் ஆண்டு முழுவதும் தேய்மானம் செய்யப்பட்டதால், ரூபா 37 மில்லியன் அதிகமாக தேய்மானம் செய்யப்படடிருந்தது. . | எதிர்காலத்தில் இதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து, பொறி மற்றும் உபகரண விடயமொன்றை மறுமதிப்பீடு செய்யும் போது, அந்தச் சொத்திற்குரிய சொத்து, பொறி மற்றும் உபகரண வர்க்கம் முழுமையாக மறுமதிப்பீடு | 2023 ஆண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்ட போது, நிறுவனத்திற்கு சொந்தமான 03 மோட்டார் வாகனங்கள் மறுமதிப்பீடு செய்யப்படாது அந்த 03 வாகனங்கள் தொடர்பான கிரயம் மற்றும் திரண்ட தேய்மான ஒதுக்கம் மறுமதிப்பீட்டுக் கணக்கில் சீராக்கம் செய்யப்படவில்லை. | | |
| (ஈ) 2022 திசம்பர் 31 அன்று நிறுவனத்தின் வாகனங்களின் மறுமதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக இலாபத்தைக் கணக்கிடும்போது 2022 ஆம் ஆண்டிற்கான ரூபா 391,413 தேய்மானம் குறைவாகவும் மற்றும் மறுமதிப்பீட்டு மதிப்பின் அடிப்படையில் ஆண்டு முழுவதும் வாகனத் தேய்மானம் கணக்கிடப்பட்டதால் ரூபா 19 மில்லியன் தேய்மானம அதிகமாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன | 2023 ஆண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான தேய்மானம் ஒதுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 மற்றும் 09 ஆண்டுகளுக்கு இடையில் காணப்பட்ட ரூபா 1.2 மில்லியன் ஆன பிடிகாசு தீர்க்கப்படாமல் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டில் அப்பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய தொகை விரைவில் தீர்க்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆகஸ்ட் 21 அன்று பணிகள் முடிக்கப்பட்ட வென்னப்புவ பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக | அதிகமாக செலுத்தப்பட்ட பணம் அந்த ஒப்பநதகாரருக்கு ஏனைய ஒப்பந்ததாரர்கள் சார்பாக வசூலிக்கப்படும் பணத்தில் | பெற வேண்டிய தொகை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 2 மில்லியன் மற்றும் 2 முதல் 5 வருடங்கள் வரை பழமையான ரூபா 120 மில்லியன் பெறத்தக்க ஒப்பந்த முற்பணங்கள் இதுவரை மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இருந்து செலுத்தப்படும் என்று எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தலொன்று படையணிக்கு வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்ட 5 பயிற்சி நிலையங்கள் தொடர்பான ஒப்பந்த உடன்படிக்கைகள் 02 முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இரத்து செய்யப்பட்ட போதிலும், 2016-2017 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 60.6 மில்லியன் ஆன முற்பணங்கள் மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தம்புள்ளை பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பெல்மடுல்ல பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிக்கான ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அதற்கான கட்டணத் தொகையை செலுத்துவதற்கு முற்பணம் வசூலிப்பதற்கு எழுத்து மூலம் ஒப்பந்தம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>கொட்டபொல பயிற்சி நிலையத்தில் முற்பணங்களைத் தீர்ப்பதற்காக சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் உரிய முற்பணத்தை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>வெலிமடை பயிற்சி நிலையம் மற்றும் மெகஹகிவுல பயிற்சி நிலையம் என்பன ஒரு நடுவருக்கு (Arbitration) சமர்ப்பிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>கோமரன்கடவல பயிற்சி நிலைய நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. | நிறுத்தப்பட்ட கட்டுமானங்களுக்காக செலுத்தப்பட்ட முற்பணங்கள் அறவிடப்பட வேண்டும்.. |
| (இ) | படையணியின் 10 புதிய நிலையங்கள் மற்றும் தற்போதுள்ள நிலையங்களின் 21 கட்டிட அலகுகளுக்கான | மேலும் தீர்க்கப்பட வேண்டியிருந்த ரூபா 37,615,680 முற்பணத் தொகை இறுதிப் பற்றுச்சீட்டுக்கள் | நிறுத்தப்பட்ட கட்டுமானங்களுக்காக செலுத்தப்பட்ட முற்பணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்களுக்கான ஒப்பந்தம் திறந்த டென்டர் நடைமுறைக்கு முரணாக அரச நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிர்மாணங்களின் முன்னேற்றம் தோல்வியடைந்ததால் 2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்டன. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிர்மாணப் பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 109 மில்லியன் ஆன முற்பணத் தொகையில் மேலும் அறவிட வேண்டிய ரூபா 38 மில்லியன் ஆன முற்பணத்தை அறவிடுவதற்கு படையணி தவறியிருந்தது. | தீர்க்கப்படும்போது அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அறவிடப்பட வேண்டும்.. |

## 1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு - | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 அம் பந்தி | படையணிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. | 2023-2027 ஆம் ஆண்டுகளுக்கான வரைவுபடுத்தப்பட்ட மூலோபாய திட்டம் 2023 யூலை 30 வரையில் முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | படையணியால் 2022 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 3,055 மில்லியன் ஆன சொத்து, பொறி மற்றும் உபகரணங்களுக்காக் | தற்போது சொத்துக்கள்' மீள்மதிப்பிடப்பட்டு சொத்துகள் பதிவேடு ட நாளதுவரையாக்கப்படுவ தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்ட போதிலும் முறையாக நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2022 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணிச் சட்டத்தின் 2(4) பிரிவு | சுபையின் நிர்வாகத்திற்குத் தேவையான தொழில்முறை பயிற்சி, இளைஞர் மேம்பாடு மற்றும் நிறுவலுக்கு 3 குழுக்கள் நியமிக்கப்பட வேண்டியதுடன் சபையினால் அதன் அதிகாரங்களை அந்தக் குழுக்களுக்கு பகிர்ந்தளிக்க முடியுமென்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தேசிய இளைஞர் படையணியால் படையணி ஆரம்பிக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு செய்யப்படவில்லை. | திருத்தப்படவுள்ள புதிய அதிகார சபைச் சட்டத்தில் இந்த மூன்று குழுக்கள் தொடர்பில் குறிப்பிடப்படாததால், எதிர்வரும் சபைக் கூட்டத்திற்காக இந்த 03 குழுக்களின் நியமனம் தொடர்பான சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | இளைஞர் படையணிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2008/(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | (i)குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனத்திற்கு இணங்க நிறுவனத்தால் குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படவில்லை. | தற்போது வரைவு செய்யப்பட்ட குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகு, அது தேசிய இளைஞர் படையணி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு . அங்கீகாரத்தை பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |
| | | (ii)அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட வில்லை. | வருடாந்த செயல்திறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு வருவதுடன் , மிக விரைவில் முடிப்பதற்கான | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை மேற்கொள்ளப் படும். | |
| (உ) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் படி, படையணியால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 31 மில்லியன் பெறுமதியான 08 வாகனங்கள் படையணியின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை. | பதிவு உரிமைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4.7 மில்லியன் ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 16.4 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21.2 மில்லியன் ஆன பின்னடைபொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு மொத்த வருமானம் அதிகரிப்பை விட செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் இளைஞர் அபிவிருத்தி பணிகளின் செலவுகள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த மற்றும் படையணிக்கு சொந்தமான 65 காணிகளில் 22 காணிகள் மாத்திரமே படையணிக்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 43 காணிகளைக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 02 நிலையங்களில் காணிகளை கையேற்பதறகு காணி ஆணையாளர் நாயகம் அனுமதி வழங்கியுள்ளார். 07 நிலையங்களின் காணி பரிமாற்றம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 31 நிலையங்களின் காணிகளை கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.. | காணிகளை கையகப்படுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஆ) | 2011 திசெம்பர் 15 திகதிய அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டு 12 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து விட்ட போதிலும் , அமைச்சரவைத் | இதற்கான சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற்று அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்ததையடுத்து, இந்தச் | படையணியின் நோக்கங்களை நிறைவேற்றுவ தற்கு தேவையான திருத்தங்களுடன் |

| | | |
|---|---|---|
| தீர்மானத்தின்படி நாட்டில் இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்தும் பணியை சிறப்பாகவும், திறம்படவும் மேற்கொள்வதற்கு, தற்போதுள்ள இளைஞர் படையணிச் சட்டத்தைத் திருத்தியமைத்து, புதிய சட்டமொன்று இயற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் மேலும் பல திருத்தங்கள் உள்ளடக்கப்பட உள்ளதாக அமைச்சரவை தெரிவித்ததால், அங்கீகாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. | சட்டம் தாமதமின்றி அங்கீகரிக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தொழிலாளர் சந்தையில் உள்ள பணியாளர்களுக்கு அவர்களின் திறன்களின் அடிப்படையில் வேலைகளுக்கு அவர்களை வழிநடத்தும் நோக்கத்துடன் கோட்பாட்டு அறிவு மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்காக 2022ஆம் ஆண்டில் ரூபா 90 மில்லியன் மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்காக, 07 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுடன் 4,499 பயிற்சியாளர்களுக்கு 16 பாடநெறிகளைக் கொண்ட வேலை சார்ந்த பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் திட்டங்களைத் தயாரித்திருந்தது. ஆனால், மேற்கூறிய 2 வேலை சார்ந்த பயிற்சி வகுப்புகள் ஏற்கனவே நிறுவனத்தின் ஏற்பாடுகளின் மூலம் செயல்படுத்தப்பட்டிருந்தாலும், ரூபா 25.8 மில்லியன மேற்படி நிநிதியத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி நிதியில் இருந்து ரூபா 1.6 மில்லியன் செலவில் 1,392 பயிலுனர்களுக்கு நிகழ்நிலை பயிற்சி நெறியொன்று நடாத்தப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களின் முன்னேற்றம் குறித்த தரவுகள் நிறுவனத்திடம் இருக்கவில்லை. மேலும் நிறுவனத்தில் 723 பயிற்சியாளர்களின் பின்னூட்டத் தரவுகள் மட்டுமே காணப்பட்டது. இதில், 712 பயிற்சியாளர்களுக்கு மட்டுமே தொழிற்பயிற்சி தகுதி (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, மீளாய்வாண்டில் திறமையின் | தகவல் தொழில்நுட்பப் பாடநெறிக்கான பாடநெறிக் கட்டணத்தை ஒரு மாதம் கடந்த பின்னரும் செலுத்த முடியாத நிலையில் இருந்த பயிலுனர்களின் நலனுக்காக பாடத்திட்டத்தை தொடரும் நோக்கில் இந்த ஏற்பாட்டின் மூலம் ரூபா 15,262,500 செலவிடப்பட்டது. சாதாரண நடவடிக்கையொன்றான ஹோட்டல் கற்கைநெறிக்காக கோரப்பட்ட கட்டுநிதி குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்காமையால் தொழில் சார்ந்த கற்கைநெறிகளைத் தொடர்வதற்கான நோக்கத்தில் ஹோட்டல் கற்கைநெறிக்காகத் தேவைப்பட்ட ரூபா 8,540,000 ஆன தொகை இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் மூலம் செலவிடப்பட்டது. | மேலதிக ஒதுக்கீடு பறிப்பிட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

அடிப்படையில் ஒரு புதிய வேலையை வழங்கும் நோக்கத்துடன் நடாத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளில் இருந்து போதுமான செயற்திறன் எட்டப்படவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| படையணியில் 2022 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 950 மற்றும உள்ளபடியான பதவியணி 743 ஆக இருந்தமையால் 207 அதிகாரிகளின் வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடமாகவுள்ள பதவிகளில் படையணியின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் மற்றும் செயற்திறனைப் பிரதானமாக பாதிக்கின்ற 117 ஆலோசகர்களின் வெற்றிடங்கள் உள்ளடங்கி இருந்தன, | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சினால் புதிய ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் இவ்வெற்றிடங்களுக்கான புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்பட வேண்டும். |